# தீர்விலிருந்து மாற்றுநிலையாக்கத்துக்கு : சொல்லாடற் செய்திட்டங்களின் வகிபாகம்

நோபேர்ட் ரோப்பர்ஸ்




1. அறிமுகம் 314

2. சொல்லாடலை முறைநிலைப்படுத்துவதற்கான அணுகுமுறைகள் 315

3. செய்முறை நிலையில் சொல்லாடல் செய்திட்டங்கள் 319

முறைவழி நிலையிலிருந்து சமாதானத்தைக் கட்டிவளர்ப்பதற்கான சொல்லாடல் செய்திட்டங்களும் ஆள்களுக்கிடையேயான தீர்வு முயற்சிகளும் 319

சொல்லாடல் செய்திட்டங்களுக்கு வேண்டிய தனியாள் தகைமைகளைக் கட்டியெழுப்பலுடன் இணைந்த சொல்லாடல் செய்திட்டங்கள் 320

நிறுவன கட்டியெழுப்புகை, வலையமைப்பு, செயல்நிலை செய்திட்டங்கள் ஆகியனவற்றைக் சொல்லாடல் செய்திட்டங்களுடன் இணைத்தல். 320

தீர்வுத் தேடுகைக்கு முன்வருவதாக சொல்லாடல் செய்திட்டங்கள் அமைதல் 321

4. மோதுகை முகாமைத்துவக் கோட்பாடுகளின் சூழமைவில் சொல்லாடல் செய்திட்டங்கள் 321

5. கற்றுக் கொண்ட படிப்பினைகள் 326

6. உசாத்துணையும் மேலதிக வாசிப்பும் 330

# தீர்விலிருந்து மாற்றுநிலையாக்கத்துக்கு : சொல்லாடற் செய்திட்டங்களின் வகிபாகம்

நோபேர்ட் ரோப்பர்ஸ்

## 1. அறிமுகம்

சொல்லாடல்கள் என்பவை மோதுகைகளைக் கையாளுவதற்கான மிகச் செம்மையானதொன்றாக இல்லாவிடினும்-ஆக்கபூர்வமான ஒரு முறைவழியாகக் கருதப்பட முடியும். மக்கள் மத்தியில் பிரபலமான முதுமொழியொன்று இப்படிக் கூறுகின்றது: "நீ பேசிக் கொண்டிருக்கும் வரையும் சுட்டுக்கொண்டிருக்கவும் முடியாது." "கருத்து வேறுபாடுகளுக்கு இடமளிக்கும் விடயங்களை நேர்மையான கருத்துப் பரிமாற்றம் மூலம் அல்லாது வேறு என்ன சிறந்த முறையூடாகத்தான் தீர்வு காண முடியும்" என்று மற்றுமொரு கருத்தாடல் ஒழுக்கநெறி கூறுகிறது. "பரஸ்பரம் சார்பானதும், பன்மைத்துவம் கொண்டதுமான ஓருலகில் பல்வேறு அரசியல் மற்றும் ஒழுக்கம் சார்ந்த மோதுகைகளுக்கான நிரந்தரமான ஒரு தீர்வினைக் காண்பதற்கு, பாதிப்புற்ற தரத்தினர்க்கிடையேயான நடைமுறைக்கேற்ற சொல்லாடல் அன்றி வேறென்ன வழிதான் உண்டு" என வினவுகின்றது கருத்தாடல் ஒழுக்க நெறி (ஏப்பெல் 1990).

பொதுமக்கள் புலப்பதிவினை பொறுத்தவரையில் தடம் -1ற்கான பேச்சவார்த்தை இராஜதந்திரம், அதிகார அரசியலின் காரணமாகவும் யதார்த்த அரசியலின் காரணமாகவும் பேச்சவார்த்தை இன்று பெரிதும் பின்தள்ளப்பட்டுவிட்டதெனினும் தொல்சீர் இராஜதந்தர முறைமையில் சர்வதேச உறவுகள் பற்றிய சிந்தனா பூர்வமான முகாமைத்துவம் பற்றிய நடைமுறைகளில் பேச்சுவார்த்தை சொல்லாடற் திறன்கள் மிகமுக்கியமானவையாக கொள்ளப்படுவதை அவதானிக்கலாம். மாறாக, உத்தியோகபூர்வ தடம் 11 இராஜதந்திரத்தின் பிரதிநிதிகள், நேரடியாக எதிர்கொள்ளல் மற்றும் பரஸ்பர புரிந்துணர்வு என்பவற்றையே தொடர்பாடலின் மையவிடயங்களாக கொள்கின்றனர். இவ்வகையான உத்தியோகபூர்வமற்ற சொல்லாடலுக்கான முன் முயற்சிகள் பற்றிய ஆர்வமானது, சமுதாயத்திற்குள்ளேயே அதிகரித்த அளவில் இடம்பெறுகின்ற, இன அரசியல் ரீதியான நீண்டகாலம் நிலவிவருகின்ற பல் வகைப்பட்ட, கடுமையான அல்லது உள்ளார்ந்த ரீதியில் வன்முறையான பிணக்குகளின் தொடர்ச்சியாக அதிகரித்து வரும் எண்ணிக்கையினால் மேலும் வளர்க்கப்பட்டு வருகிறது.



இப்பொழுது, மோதுகைகளை இணக்குவிக்க, அவற்றைத் தீர்த்து வைக்க அல்லது அவற்றின் மீது செல்வாக்குச் செலுத்த வடிவமைக்கப்பட்ட, அடிமட்டத்திலிருந்து தலைமைத்துவ மட்டம் வரையிலான மிக அதிக எண்ணிக்கையிலான சொல்லாடற் கருத்திட்டங்கள் பல ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆனால் இவற்றின் போக்கினை விமர்சிப்போர் இல்லாமலில்லை. ஒரு மோதுகையின் பொருட்டுப் பேச்சுவார்த்தை மேசையைச் சுற்றித், சம்பந்தப்பட்ட தரப்பினரின் மிதவாதப் போக்குடைய பிரதிநிதிகள் மட்டும்தான் இருப்பார்களெனின் அதனால் வரும் உண்மையான நன்மைதான் யாது? செயலமர்வொன்றின் அல்லது செயலமர்வுத் தொடரொன்றின் சட்டகத்தினுள் செல்வாக்குப்படைத்த ஆட்களிடையே புரிந்துணர்வும், விளக்கமும் அடையப் பெற்றாலுங் கூட, முழுத்தொழில் முயற்சியினதும் வெற்றியானது, எவ்வாறு செயலமர்வு தொடர்வு முகாமைத்துவம் செய்யப்பட்டது என்பதில் தங்கியிருக்கவில்லையா?

இறுதியாக உரையாடல் முறையைப் பின்பற்றுபவர்கள் மோதுகைகளைக் கையாள்கையில், தொடர்பாடலின் முக்கியத்துவத்தை அடிப்படையிலேயே மிகை மதிப்பீடு செய்யும் ஆபத்தினை எதிர்கொள்வதில்லையா? அனைத்திற்கும் மாறாக, அநேகமான பிணக்குகளின் அக்கறைக்குரித்தான

இறுதிவிடயமாக இருப்பது மாறா நியமக்கருத்துடைய எண்ணங்களோ, கருத்து வேறுபாடுகளோ அல்லது வேறுபடும் கலாசார நியமங்களோ அல்ல. மாறாக ஐயத்திற்கிடமில்லாத நலன்சார் மோதுகைகளும் கட்டமைப்புசார் காரணிகளும் மற்றும் அதிகாரத்திற்கும், ஆதிக்கத்திற்குமான போராட்டமுமே ஆகும். ஆகவே, மோதுகையின் ஒட்டுமொத்த அசைவியக்கம் மற்றும் மோதுகை மாற்றுநிலையாக்கம் என்பவற்றின் சூழமைவிலேயே சொல்லாடல்கள் நடாத்தப்பட வேண்டும் என்பது புலனாகிறது.

முடிவுறாது இழுத்தடிக்கப்படும் மோதுகைகள், அவற்றின் அமைப்பியல் அம்சங்களை கருத்திற் கொண்டு மேற்கொள்ளப்படும் ஒழுங்குகள் மூலமாகவே மாற்றுநிலையாக்கத்துக்கு உட்படுத்தப்படலாம் என்பதை அநேக கல்விப் புலமையாளர்களும், செயற்பாட்டாளர்களும் ஏற்றுக் கொள்வார்கள். தொடர்பாடல் மற்றும் தனிப்பட்ட ஊடாட்டம் என்பவற்றின் மீது அவர்கள் செலுத்திய அழுத்தங்கள் காரணமாக, உளவியற் சமூக மோதுகை மாற்றநிலையாக்க நெறியுதாரணத்திற்குள், சொல்லாடல்கள் ஒரு கருவியாகவே முதன்மைநிலையில் பயன்படுத்தப்படுகின்றன என்பது தெளிவு. எனவே, மிகவும் குறுகிய விதமாக வரையறுக்கப்பட்டுள்ள கருத்தியல் சூழமைவுக்குள்ளேதான் அவற்றின் பயன்பாட்டை நான் கணிப்பீடு செய்வேன்.

இனிவரும் பகுதியில், சொல்லாடற் செய்திட்டங்களின் வகைகள் மற்றும் அவற்றின் தாற்பரியங்கள் என்பவற்றைக் கண்ணோக்கியவாறு, சொல்லாடற் செய்திட்டங்களின் சில முக்கிய அம்சங்களை மேலும் விரிவாக நான் ஆராயவுள்ளேன். முதலில் நான், அநேக வெவ்வேறு விதமான ‘இலட்சிய வகையான’ உரையாடல்கள் பற்றியும், பெரும்பாலான சொல்லாடற் செய்முறைகளின் அடிப்படை மூலகங்களை இனங் காண்பது பற்றியும் மேலோட்டப்பார்வையொன்றைத் தருவேன். இரண்டாவது, இத்தகைய செய்திட்டங்களின் நடைமுறைப் பண்பை விளக்குவதற்கென்றே இருக்கின்ற ஒரு வகுப்பு தொகுப்பு முறையியல் என்ற வகையில், சொல்லாடற் பணியின் நான்கு எண்ணக் கருக்களிடையேயிலான வேறுபாட்டைத் தருவேன் மூன்றாவதாக, இதில் வெற்றியை அளவிடுவதற்கான சிறந்த அளவுகோல்களை நிறுவும் பொருட்டு, மோதுகையைக் கையாளுவதற்கான பல்வேறு அணுகுமுறைகளின் சூழமைவில் சொல்லாடற் செய்திட்டங்கள் வைக்கப்படும். நான்காவதாக, சமீபத்திய மதிப்பீட்டுக் கற்கைகளின் பொது கற்றுக் கொண்ட பல பாடங்களைச் சமர்ப்பிக்கவுள்ளேன். எதனை ஆதாரமாகக் கொண்டு இவ்வத்தியாயம் ஆக்கப்பட்டள்ளதோ அந்த அடிப்படையான பரிசோதனை அறிவுசார்ந்த அனுபவத்தின் அடிப்படையில், மேலே எழுப்பப்பட்ட வினாக்கள் இறுதியில் ஆராயப்படும். 315

## 2. சொல்லாடலை முறைநிலைப்படுத்துவதற்கான அணுகுமுறைகள்

அண்மைக்கால இலக்கியமானது சொல்லாடல்களை வகுப்பினப்படுத்தும் இருவித வழிகள் மீது குறிப்பிட்ட கவனத்தைச் செலுத்துகின்றது; முதலாவது உரையாடலின் இலட்சிய வகைகளை இனங்காணல்; இரண்டாவது ஆக்கபூர்வமான சொல்லாடற் செய்முறையை ஏற்படுத்துகின்ற ஊடாட்டம் மற்றும் தொடர்பாடல் என்பவற்றின் வகையுதாரணப் படிமுறைகளின் படி கட்டங்களை வேறுபடுத்தல்.

ஜே றொத்மன்(1998) என்பார் குழுக்களிடையேயான உரையாடலுக்கான அணுகுமுறைகளின் வகுப்பினப்படுத்தலை மூன்று அல்லது நான்கு ஆதர்ச வகைகளுக்குள் அடக்குகின்றார்.

* மிகச் சாதாரணமாக மேற்கொள்ளப்படும் கருத்து(சொல்) ஊடாட்டம் Dialogue(சொல்லாடல்) என்படுவது உற்று நோக்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். Dialogue என சொல்லப்படும் நிலையில் ஒவ்வொரு தரப்பினரும் தத்தம் கருத்துக்களை எடுத்துக் கூறுவர். அக் கருத்துக்கள் வேறுபாடுடையன என்ற நிலையிலிருந்து முற்றிலும் எதிர் நிலைப்பட்டனவாக அமையும் அளவுக்கு செல்லலாம். அவ்வாறு எடுத்துக் கூறும் போது, கூறப்படுவது அங்கீகரிக்கப்படவேண்டும் என்பதல்ல, அறிந்து கொள்ளப்

படவேண்டும் என்பதாகும். பாராளுமன்ற விவாதத்தில் நடைபெறுவது போன்று தொடர்பாடல்(சொல்லாடல்) என்பது ஒருவாதம் இன்னொரு வாதத்திற்கெதிராக வைக்கப்படுவதால், தொடர்பாடலானது ஒன்று மற்றொன்றை விஞ்சுவதற்கான முறையிலேயே அமையும். இங்கு எடுத்துரைக்கப்படும் வாதங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று எதிரானவையாக- ஒன்றையொன்று நிராகரிப்பனவையாக அமையலாம். ...... **Dialogue எனும் ஆங்கிலப் பதத்தினை சொல்லாடல் என இங்கு மொழிபெயர்த்துள்ளோம். Dialogue எனும் பதத்தின் கருத்து ( Dia+logos) சொற்களின் மூலமாக என்பதாகும். அதாவது, சொற்களின் மூலமாக ஒருவர் கருத்தை மற்றவர் அறிவதும் தெரிவிப்பதுவும் , அந்த நிலையில் ஊடாட்டம் ஏற்படுவதுமாகிய நிலைகளை Dialogue (சொல்லாடல்) எனும் சொல் குறித்து நிற்கும். Conversation என்பதுவும் Dialogue என்பதுவும் வெவ்வேறு நிலைகளைக் குறிப்பன.சொல்லாடல் எனும் இப்பதம் சொற்கள் மூலமாக ஒருவரோடு உறவை ஏற்படுத்துவதை அல்லது உறவாடுவதைக் குறிக்கும்.கலித்தொகையில் இப்பயன்பாடு வருகிறது.**

* *மனித உறவுநிலை சொல்லாடலில்* கருத்து வித்தியாசங்கள் இரண்டாம் நிலைக்கு தள்ளப்படுகிறன :அங்கு செய்பணியானது உறவு நிலை செம்மையிலேயே மேற்கொள்ளப்படுகிறது. அப்படி மேற்கொள்ளப்படும் போது தப்பபிப்பிராயத்திற்கான காரணங்கள் மீதும் வழமையாக எழுகின்ற விடயங்கள் மீதுமே உன்னிப்பான கவனம் செலுத்தப்படுகிறது. பெரும்பாலும் இவ்வகையான உரையாடல்களுக்கு முன்பாகக் குழுக்களில் புலனுணர்வு மற்றம் ஊடாட்டம் என்பவற்றின் அடிப்படை வழிமுறையமைப்புப் பற்றிய ஆயத்தப் பயிற்சி அமர்வுகள் இடம்பெறுகின்றன. ஆள் பற்றிய பரஸ்பர அங்கீகாரம் மற்றும் ஒரு தரப்பு மற்றொன்றின்மீது அதிகரித்த மரியாதை செலுத்தல் என்பவையே இதன் குறிக்கோள்கள். மோதுகைப் பொருள் விடயத்தைப் பொறுத்த மட்டில் எத்தாக்கத்தை இது கொண்டிருக்கும் என்பது பகிரங்கமான ஓர் திறந்த வினாவாகும்.



* *தீவிர ஆர்வ செயற்பாட்டாளர் சொல்லாடலோ* ஒரு படி மேலே செல்கிறது. பொதுமையான நிலைப்பாடுகளை இனங் காணல், மற்றும் / அல்லது கூட்டு நடவடிக்கை மூலம் தமது பிணக்கைத் தரப்பினர் எவ்வாறு கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடும் என்பதை ஆராய்தல் என்பவற்றின் பொருட்டு, பிரச்சினைக்குரிய விடயங்கள் தரம் பிரிக்கப்பட்டுப் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன.

* மிகவும் தீவிர ஏதிர்பார்ப்புடன் கூடிய அணுகுமுறைதான் பிரச்சினை தீர்க்கும் சொல்லாடல் ஆகும், இதில், தமது வேறுபாடுகளுக்குரிய விடயங்களினூடாக தாம் முறைமையாகச் செயற்படுவதை இயலுமானதாக்கும் வகையில் பிணக்காளர்கள் தமது தொடர்பாடலை அமைத்துக் கொள்கின்றனர். எங்கு மோதுகைகள் மிகவும் உச்ச மட்டத்தில் உள்ளனவோ அங்கு இவ்வகையான சொல்லாடலுக்கு,உடன் செயற்பாட்டாளராக அல்லது உண்மையில் ஒரு முன் முயற்சி செய்பவராக இருக்கக்கூடிய மூன்றாந்தரப்பொன்றின் பிரசன்னம் பொதுவாக அவசியமானதாயிருக்கும். இடைத்தாக்கங்களின் தற்போதைய வடிவங்களின் பிரகாரம் உரையாடல்களை வகைப்படுத்துவதற்கான பயனுள்ள ஒரு வழிமுறையை விட, இவ்வணுகு முறைகள் சிறிது அதிகமானவை. ஒன்றை எடுத்து நோக்குகையில், உரையாடல் மூலமாக மோதுகைகளை ஆக்கபூர்வமாகக் கையாள்வதன் வேறுபட்ட ஆனால் குறை நிரப்புகின்ற மூலகங்களுக்கு இவையும் அழுத்தம் கொடுக்கின்றன. மாற்றியமைக்கப்பட்ட ஒரு வடிவத்தில் பார்க்கையில்,சொல்லாடல் பங்காண்மையாளர்களுக்கிடையேயான தொடர்பாடல் மற்றும் இடைத்தாக்கம் என்பனவற்றின் தரத்தினை மேம்படுத்துவதன் செயன் முறையொன்றினூடாக வெவ்வேறு விதமான சொல்லாடல்களுக்கு ஒருவர் தம் மனதில் கருத்து வடிவம் கொடுக்கவும் முடியும் (பார்க்க: உரு 1). மாற்றீட்டுப் பிணக்குத் தீர்வு (Alternative Dispute Resolution-ADR) இயக்கத்தின் பற்றாளர்கள், தொடர்பாடல் மூலமாக மோதுகைகளுக்குப் பதிற் செயற்பாடு புரிவதற்காக நான்கு கட்டங்களைக் கொண்ட ஓர் அச்சுருவை முன்வைத்துள்ளனர்:

* முதற்கட்டமானது, வெவ்வேறு தரப்பினரின் *வேறுபடுகின்ற கருத்துரைகளுக்கு*, அவர்களின் பரஸ்பர ஒப்புதல் பெறப்பட்டு, மோதுகையின் சாரமும் இனங்காணப்பட்ட நிலையில், அவற்றை இயலுமான வரை தெளிவாக வகுத்தமைப்பதில் அக்கறை கொண்டதாக அமைப்பது.


* இரண்டாம் கட்டமானது, அடிப்படையாக இருக்கின்ற பங்கேற்கும் செயற்பாட்டாளர்களின் தேவைகள் மற்றும் அச்சங்கள், அவர்களின் பெறுமானங்கள், மோதுகை பற்றிய அவர்களின் அனுபவங்கள் அத்துடன் அவர்களின் நம்பிக்கைகள் என்பவை குறித்து சிந்திப்பதில் கவனம் செலுத்துகின்றது. மறு தரப்பின் மோதுகை சுய வரலாறு குறித்த தன் சொந்த ஒப்புதல் மற்றும் நுண்ணறிவு என்பவற்றைப் பெறுவதற்கான அணுகுமுறைகளை அபிவிருத்தி செய்யவும் இயலுமானதாக இருத்தல் வேண்டும்.

* மூன்றாம் கட்டமானது, தரப்பினரிடையேயான பகிரப்பட்ட *நலன்கள்* மற்றும் அது போன்று பகிரப்பட்ட *தேவைகள்* மற்றும் *அச்சங்கள்* என்பவற்றை இனங் காண்பதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கடுமை குறைந்த சச்சரவுக்குரிய விடயங்களில், நடைமுறைக்கேற்ற ஒத்துழைப்பைத் தொடக்குவதைக் குறிவைத்ததாகவும் அது இருக்கலாம்.

* அநேக விடய நிகழ்வுகளில் நான்காவது கட்டமானது நீண்ட தயாரிப்பு காலகட்டத்தையும் அத்துடன் *பிணக்கில் உள்ள பொருண்மைப் பிரச்சினைகளைக் கையாளுவதற்கான* அணுகுமுறைகளையும் கருத்துக்களையும் ஆராய்தல். இந்த அணுகுமுறைகளையும் ஆலோசனைகளையும் எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பதைச் சிந்தித்தல் மற்றும் *அவற்றின் தீர்வுக்காக நடைமுறைக்குப் பொருந்தி வருகிற நடவடிக்கைகளைத் தொடக்கிவைத்தல்* என்பவற்றுடன் அது தொடர்புற்றுள்ளது.

உரு 1: சொல்லாடற் செயல்முறைகளில் ஒத்துழைப்பின் மட்டங்கள்






மூலம் : மக்கார்ட்ணி 1986

நீண்ட காலம் நிலவிவரும் மோதுகைகள் விடயத்தில், பிணக்குக்குட்பட்ட குழுக்களிடையேயான சொல்லாடல்கள், சொல்லாடல் நிகழ்வுகளின் ஒரு தொடராகவே பெரும்பாலும் கட்டமைக்கப்படும், சில சமயங்களில் பல மாத காலத்துக்கு, ஏன் பல வருட காலத்துக்கு இது நீட்சியடையலாம். அத்தகைய ஒரு நிகழ்வுத் தொடருக்கான ஆக்கபூர்வமான அபிவிருத்திகளைக் கருத்துருவாக்கம் செய்ய அநேக மாதிரிகள் துணைபுரிகின்றன. இவற்றுள் ஒன்று, பிரதான பண்புகளாக தரப்பினரிடையேயான உறவின் தன்மை பற்றியும் கூட்டு முயற்சிகளின் வெற்றி பற்றியும் குறிப்பாகக் கவனத்தைச் செலுத்துகின்றது. இவ்வாறாக, முன்னேற்றம் என்பதற்கு உறவு முறைகளைக் கட்டியெழுப்புகின்ற, பிரச்சினை தீர்க்கின்ற கூட்டுச்செயற்பாட்டின் ஒரு முறைவழியே அது என்று பொருள் காண்கிறது (மக்கார்ட்னி 1986):

* தொடர்பையும் நம்பிக்கையையும் கட்டியெழுப்புதல்,
* மறுதரப்புக்குறித்து அவர்கள் நிலைநின்று நோக்குதல்,
* மோதுகை பற்றி எழும்வினாக்களை கூட்டுபகுப்பாய்வு செய்தல்,
* ஆய்வு முறைப்படி பிரச்சினையைத் தீர்த்தல்,
* உரையாடலானது அதிகாரபூர்வ பேச்சுவார்த்தைக்கு அல்லது பேச்சுவார்த்தைக்கு முந்திய பேச்சுவார்த்தைக்கு ஊட்டமளிப்பதை இயலுமானதாக்குவதில் கூட்டுச்செயற்பாடுகள்.

பெரும்பாலன சொல்லாடல்கள் சம்பந்தப்பட்டவர்கள் நேருக்கு நேர் முகம்கொடுத்து சோல்லாடுவதற்கான முறையில் அமைகின்ற குழும நிலை எதிர்கொள்ளல்களாகவே அமையும். வழமையாக அவை பொதுவாக உயர்மட்ட தலைவர்களுக்கு சற்று குறைந்த நிலையிலுள்ளவர்களுடனேயே மேற்கொள்ளப்படும். எனவே அவற்றை அரசியல் தொடக்க நிலைக்கு உரியன எனக் கொள்ளலாமே தவிர உத்தியோகபூர்வ பேச்சவார்த்தைகள் என கொள்ளமுடியாது. பொதுவான நியதிப்படி இத்தகைய சொல்லாடல்களுக்கான தோற்றுவிப்பு, ஒழுங்கமைப்பு, திசைமுகப்படுத்துகை ஆகியன மூன்றாம் தரப்பு ஒன்றாலேயே நடத்தப்படும். இந்த மூன்றாந்தரப்பானது நாட்டுக்கு வெளியே இருந்து தான் வரவேண்டும் என்ற அவசியமில்லை, மோதுகை நிலவும் பிரதேசத்தின் உள்ளேயிருக்கக்கூடிய மிதவாத போக்குடைய தனிநபர்கள் கூட இதற்குள் வரலாம். மிகவும் மோசமான நிலையில் உள்ள பிணக்குகள் விடயத்தில் அல்லது பிளவுபட்ட சமுதாயங்களில், இடையிடுவோர் பெரும்பாலும் முதற் கட்டத்தைத்தானும் வெற்றிகரமாகத் தாண்ட முடியாது சிரமப்படும் நிலையில், சமாதானமான ஓர் ஒன்றுகூடலை ஒழுங்கு செய்வதென்பது சிக்கலானதே. நீண்டகாலம் நிலவும் மோதுகைகளைப் பொறுத்தவரையில், அநேக கூட்டங்களை நடாத்துவது அவசியமாக இருக்கக்கூடும் என்பதுடன், முன்னைய கட்டத்துக்கு மீளச்செல்வது சாத்தியமென்பதை இடையிடுவோர் எப்போதும் அறிந்திருக்க வேண்டும். காலத்தின் தேவையும், முறைவழியின் பொதுவான இலகுவில் முறிவடையும் தன்மையும் சொல்லாடற் செய்திட்டங்களின் ஒழுங்கமைப்பாளர்களிடமிருந்து அதிக அளவிலான விடாமுயற்சி, நீண்டகால ஆதர நோக்கு மற்றும் அவசியமான மூலவளங்கள் என்பவற்றை அவாவி நிற்கின்றன.



சொல்லாடலை அடிப்படையாகக் கொண்ட அடிப்படை எண்ணம் ஒன்றும் புதிதல்ல. 1945இன் பின்னர், ஐரோப்பாவிலே, சர்வதேச கலாசாரங்களுக்கிடையிலான புரிந்துணர்வின் நெறியுதாரணச் சூழமைவிலே இதற்கான முன்முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அப்போது பிரதான இலக்குக்குழுவாக இருந்தோர் இளைய தலைமுறையினர் ஆவர். வெவ்வேறு பின்புலத்தைச் சார்ந்த தனிநபர்களுக்கிடையேயான அதிகரித்த தொடர்பும் ஊடாட்டமும், தப்பெண்ணம் மற்றும் பகைமையுணர்வுகள் என்பவற்றை அகற்றி தேசஎல்லை கடந்த பற்றுறுதி நிலைகளை உருவாக்கும் என்ற அசையாத நம்பிக்கையே இம்முயற்சியை ஊக்குவித்தது. அப்போதிலிருந்து சிறுபிள்ளைத்தனமான இந்தத் தொடர்பு புனைகோளானது அதிகரித்த கலாசாரங்களுக்கிடையிலான கற்கை என்னும் வளர்ச்சியடைந்த எண்ணக் கருக்கள் காரணமாக முக்கியமிழந்து விட்டது (ஒட்டன்/ட்ரியூஹெயிட் 1994)

திட்டவட்டமாக இன-அரசியல் முரண்பாடுகளைக் கையாள்வதற்கெனத்திட்டமிடப்பட்ட, சொல்லாடலை அடிப்படையாகக்கொண்ட சந்திப்புக்கள் மிகவும் அண்மைக்காலத்து நிகழ்வுகளாகும்; ஆனால் அவைகள் ஒரே வகையான நம்பிக்கைகளிலிருந்தே தமக்குரியதைப் பெறுகின்றன. இம்முறைகளில் அதிக அளவு செல்வாக்குச் செலுத்துகின்ற போதனா முறையாக விளங்குவது “ஊடாட்ட மூலமான மோதுகைத் தீர்வு” அல்லது “ஊடாட்டமாகப் பிரச்சினையைத் தீர்த்து வைக்கும்” இயக்கமாகும் (மிச்சல் மற்றும் பாங்க்ஸ் 1996; கெல்மன் 1992; றொனால்ட் பிஷர் 1997) இந்த அணுகுமுறையின் வேர்களானவை, கல்விப் புலமைசார் முயற்சியாக, மேலே சொன்ன ஆக்க பூர்வமான உரையாடலின் நான்கு கட்டங்கடாக மோதுகைத் தரப்பினரின் செல்வாக்குள்ள பிரதி நிதிகளை வழிநடத்தும் வகையில் பல்வேறு கல்விமான்கள்/

செயற்பாட்டாளர்களால் அழைக்கப்பட்ட காலமான 1960 வரை பின்னோக்கிச் செல்கின்றன. இந்த அணுகுமுறையின் பயன்பாட்டுடன் கூடிய அனுபவமானது இப்போது வெவ்வேறான பல நெருக்கடிப் பிரதேசங்களில் ஒன்று திரட்டப்பட்டுள்ளது.

இவ்வாறிருந்தும், ஊடாட்டம் மூலமான இந்த மோதுகைத் தீர்வுக் கைக்கருவியை முறைமைசார்ந்த பரந்த அளவுத்திட்டத்திலான ஓர் அடிப்படையில் பயன்படுத்துவதற்கு இன்னும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. இதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவுகளிற் கூறப்பட்டவாறு, இவ்வணுகு முறைகளும், மோதுகை மீது செல்வாக்குச் செலுத்தும் ஏனைய முறைகளும் இணைந்ததான தெரிவு செய்யப்பட்ட முறைகள் மீதே கவனம் இருந்து வருகின்றது.

## 3. செய்முறை நிலையில் சொல்லாடல் செய்திட்டங்கள்

நானறிந்த வரையில், மேலெழுந்தவாரியாகக்கூட, மோதுகைப் பிரதேசங்களில் இடம்பெறும் நடைமுறையான மோதுகைச் செய்திட்டங்களில் பிரதிநிதித்துவரீதியான அல்லது அகல்விரிவான எந்த ஒரு பொதுவான பார்வையும் இதுவரையில் செலுத்தப்படவில்லை. இக் கருவிகள், தொகுதியின் பயன்பாடுபற்றிய விவாதங்கள் அக்கறைக்குரிய சமுதாயச் சூழலுக்கேற்றவாறு, சொல்லாடலின் குறிப்பிட்ட வடிவங்களுக்கு மாத்திரமே இதுவரையில் பெரும்பாலும் மட்டுப்படுத்தப்பட்டு வந்துள்ளன. இதன் விளைவு கல்விமான்கள்∴செயற்பாட்டாளர்கள் மூன்றாந் தரப்பினராகத் தம் குரலை ஒலிக்கச்செய்யும் ஊடாட்டமான மோதுகைத் தீர்வு குறித்த ஒரு கல்விசார் கலந்துரையாடலாகும்.

மறு புறத்தில் அ.சா.நிறுவன உலகமானது, சொல்லாடற் செய்திட்டங்கள்(பெண்கள், இளைஞர் போன்ற) குறிப்பிட்ட குழுக்கள், (சமாதானப் பேரணிகள் போன்ற) பரிந்துரை நிகழ்வுகள் அல்லது பயிற்சி நிகழ்வுகள் என்பன பொதுவான கரிசனைகள் மீது கவனஞ்செலுத்துவதற்கென வடிவமைக்கப்பட்ட, நடைமுறைத் திட்டங்களும் இணைந்ததான சொல்லாடற் செய்திட்டங்களுக்கே தன் உறுதியான முதன்மை விருப்பத்தைக் காட்டி நிற்கின்றது. சொல்லாடற செய்திட்டங்களின் செயற்பாடு மற்றும் விளைவுகள் என்பவை மீதான இப்போதுள்ளவை போன்ற ஆவணங்கள் ஆரம்பத்தில் கல்விசார் அணுகு முறைகளுடனேயே பெரிதும் தொடர்புற்றிருந்தன. காலப்போக்கில், நிதி அனுசரணையாளர்களின் ஆர்வங்கள் ஏனைய செய்திட்டங்களின் மேலும் விரிவான ஆவணப்படுத்துகைக்கு இட்டுச் சென்றுள்ளன.



இலட்சியவகைகளின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கையில் சொல்லாடற் செய்திட்டங்களின் நான்கு நடைமுறை வடிவங்களை மேலே ஆராயப்பட்ட தொடர்பாடல் நோக்கங்களுக்கு மேலதிகமாக அவற்றின் விசேட குறிக்கோள்களுக்கமைவான விதத்தில் காணலாம்.

### 3.1 முறைவழி நிலையிலிருந்து சமாதானத்தைக் கட்டிவளர்ப்பதற்கான சொல்லாடல் செய்திட்டங்களும் ஆள்களுக்கிடையேயான தீர்வு முயற்சிகளும்

(இளையோர், பெண்கள், தொழிற் சங்கவாதிகள், தீவிர மதவாதிகள் போன்ற)இத்தகைய செய்திட்டங்கள் ஒரே இயல்பினரான (யுத்தத்தால் விதவைகளாகவும் அநாதைகளாகவும் மாறியோர், மற்றும் பலியானோரினதும், குற்றம் புரிந்தோரினதும் பிள்ளைகள் போன்ற) வன்மைச் செயல் உள்ள கடந்தகாலமொன்று காரணமாக ஒரேவிதமான ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட ”தலைவிதியை” பகிர்ந்து கொள்ளும் ஆட்கள் போன்றோரை குறிப்பிடலாம். உள்ளூர் அல்லது அயலூர் மட்டத்துடன் இச் செய்திட்டங்கள் பொதுவாகத் தொடர்புறுகின்றன. தனிப்பட்டமுறையில் எதிர்கொள்ளல்கள் மற்றும் தொடர்பாடலுக்கிருக்கும் தடைகளை அகற்றுதல் என்பவையே அவற்றின் மையக்கருத்துக்களாகும்.

மனித உறவுகளுக்கான சொல்லாடல் அதனைக் கட்டுப்படுத்தும் கருத்தாக இருக்கும் அதேவேளை, கீழிருந்து சமாதானத்தை நல்லவிதமாக முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு இவ்வகை எதிர்கொள்ளல்களை மீண்டும் மீண்டும் ஏற்படுத்தல் அதன் நீண்டகாலக் குறிக்கோளாகவுள்ளது.

"ஆழமாக யோசித்து நம்புக" எனும் (To Reflect and Trust-TRT) இயக்கத்தின் அணுகுமுறையானது இது விடயத்தில் ஒரு விசேட உதாரணமாகக் கொள்ளப்படுகிறது. வன்முறை நிறைந்த கடந்த கால அனுபவங்களைப் பகிர்வதற்கும் ஒருங்கிணைப்பதற்குமாகப் போரிற் பலியானோர் மற்றும் குற்றமிழைத்தோர் என்போரின் பிள்ளைகளை ஒன்றுசேர்ப்பது அதன் அணுகுமுறையாகும். (Bar-on 2000) இவ்வகையான செய்திட்டங்களின் பயனுறுதித் தன்மையானது, நீண்டகாலத் தனிப்பட்ட உறவுகளைக் கட்டியெழுப்பியும், மேலும் நிலையுறுதியான பகிரப்பட்ட கட்டமைப்புகளை உருவாக்கியும், தனித்த எதிர்கொள்ளல்களுக்கப்பால் நகர்ந்து செல்லும் சாத்தியப்பாடுகளையே பெரிதும் தங்கியுள்ளது.

## 3.2 சொல்லாடல் செய்திட்டங்களுக்கு வேண்டிய தனியாள் தகைமைகளைக் கட்டியெழுப்பலுடன் இணைந்த சொல்லாடல் செய்திட்டங்கள்

புரிந்துணர்வை அடையப் பெறும் நோக்கில் சொல்லாடல் முன்முயற்சிகளின் திட்டவட்டமான குறிக்கோள் எது வெனத் தெரிந்த நிலையில், ஒருவர் மற்றொருவருடன் ஆக்கபூர்வமான முறையில் ஊடாட்டம் செய்வதில் பங்கேற்பாளர்களின் திறமைகளை மேம்படுத்துவதற்கேற்ற தருணங்களையும் பயன்படுத்த வேண்டும் என்பது தெளிவாகப் புலனாகின்றது. பயிற்சி மற்றும் மோதுகை முகாமைத்துவம் என்பவற்றின் இணைவுக்கு ஆதரவாக விளங்கும் மற்றுமொரு காரணி யாதெனில், உண்மையான எதிர்கொள்ளல்கள் சொல்லாடலுக்கான திறன்களைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான உகந்த களமொன்றை வழங்குகின்றன என்னும் உண்மையாகும். இருப்பினும் இவ்வாறான நுட்பங்களின் இணைவுக்கு எதிரான இடர் வரவுகளோ அல்லது பிரதிகூலங்களோ இல்லாமல் இல்லை. ஏனென்றால், முதலாவதாக மோதுகை எதிர்கொள்ளலுக்குரிய இலக்குக் குழுக்களும் பயிற்சிக்கான இலக்குக் குழுக்களும் ஒரே குழுக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை, இரண்டாவதாக, எதிர்கொள்ளல் தொடரொன்றின் போது வெவ்வேறு பயிற்சிகளின் நோக்கத்தை இலகுபடுத்துநர்கள் முழுமையாக விளக்கத் தவறினால், பங்குகொள்வோர் மிக எளிதாகக் குழப்பத்திற்குள்ளாகலாம்.

## 3.3 நிறுவன கட்டியெழுப்புகை, வலையமைப்பு, செயல்நிலை செய்திட்டங்கள் ஆகியனவற்றைக் சொல்லாடல் செய்திட்டங்களுடன் இணைத்தல்

நியாயமான அளவு நீண்ட காலமெடுத்து மேற்கொள்ளப்பட்ட இது போன்ற இணைவுகள், நம்பிக்கை கட்டியெழுப்புகை, மேலே கூறிய முறையில் அமைந்த பல்வேறு கட்ட சொல்லாடல்கள் ஆகியனவற்றின் பின்னரே வழமையாகச் சாத்தியமாகும். அநேக சந்தர்ப்பங்களில் சொல்லாடல் என்று குறிக்கப் பெறுவது இனக் குழுக்களுக்கிடையேயான ஆலோசனைச் சபைகள், மீளிணக்க ஆணைக் குழுக்கள் அல்லது அ.சா.நிறுவன வலையமைப்புகள் என்ற வடிவத்தில் நிறுவன மயப்படுத்துவதாக இருக்கும். அல்லது, தனித்தனி அ.சா.நிறுவனங்களின் திறன்களை நிறுவுவதாகவோ கட்டியெழுப்புவதாகவோ இருக்கும். வேறு வகையிற் சொல்வதானால், மோதுகையினால் கடுமையாகப் பாதிப்புற்ற சனத்தொகையின் குழுவினருக்காக வருமான மீட்டல் திட்டங்களை ஏற்படுத்தல் போன்ற நடைமுறைக்குகந்த முயற்சிகளுக்கான ஓர் ஆரம்பத்தை சொல்லாடற் செய்திட்டங்கள் வழங்குகின்றன. உதாரணமாக வேலை வாய்ப்பற்ற இளையோர்.

இவை உரையாடல்களின் பயனுறுதியை மேம்படுத்துவதற்கும் கட்டமைப்புரீதியான மாற்றங்களைக் கொண்டு வருவதற்குமுரிய அவற்றின் உள்ளார்ந்த சக்தியைச் செயற்படுத்துவதற்கும் உகந்த நல்ல வழிமுறைகள் என்பது பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாகும். இவ்வாறான

தொடாந்து வரும் செயற்பாடுகள் இதில் ஈடுபடுகின்ற செயற்பாட்டாளர்களிடம் வெவ்வேறு கோரிக்கைகளை முன்வைக்கின்றன என்பது அடிக்கடி புறக்கணிக்கப்பட்டு வரும் ஒரு விடயமாகும் என்பதை யாரும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். சொல்லாடல் மூலமாகப் பேரியல்பான மோதுகைகளை அடக்குவதில் பல முன்முயற்சிகள் உண்மையில் வெற்றியடைந்தாலும், நிறுவனத்தைக் கட்டியெழுப்பும் போது மேலெழுகிற உள்ளக, இடைநிலை மற்றும் நுண்ணியல்புப் போட்டி பொறாமைகளால் காலப்போக்கில் அவற்றுள் சில தகர்ந்து போகின்றன.

## 3.4 தீர்வுத் தேடுகைக்கு முன்வருவதாக சொல்லாடல் செய்திட்டங்கள் அமைதல்

அரசியல் தலைமைத்துவ மட்டத்திலான மோதுகை முகாமை மீது செல்வாக்குச் செலுத்தவென வடிவமைக்கப்பட்ட சொல்லாடலை அடிப்படையாகக் கொண்ட பணிகளே மிகவும் மிதமிஞ்சிய எதிர்பார்ப்புகளைத் தருபவையாகும். அந்தரங்கமான செயலமர்வுகளை நடாத்துவதன் மூலம் ஊடாட்டமான மோதுகைத்தீர்வு அணுகுமுறையும் பிரச்சினை தீர்க்கும் அணுகுமுறையும் துல்லியமாகச் செய்ய விழைவது இதைத்தானா? இச்செயலமர்வுகளில் இவ்வணுகுமுறை அதிகார பூர்வப் பேச்சுவார்த்தைகளை இலகுபடுத்தி பின்னர் அவற்றுக்குப் புத்துயிரூட்டும் என்ற நம்பிக்கையில், மூன்றாந் தரப்பொன்று மோதுகைப்பட்டு நிற்கும் தரப்பினரின் செல்வாக்குமிக்க உறுப்பினர்களுக்கு நுண்ணறிவுகளையும் கருத்துக்களையும் எவ்வாறு விருத்தி செய்வது என்பதை எடுத்துக் காட்டுகின்றது. பின்னைய இந்தக் காரணத்திற்காக இவ்வணுகுமுறையானது சிலவேளைகளில் பேச்சுவார்த்தைக்கு முந்திய பேச்சுக் கட்டத்தின் ஒரு பகுதியாக வர்ணிக்கப்படுகிறது. இவ்வகையான முயற்சிகளின் நடைமுறை சார் விளைவுகளின் கணிப்பீடுகளில், விளை பயன்கள் ஒன்றில் உள்ளகரீதியானவை அல்லது வெளிவாரியானவை என்றே ஆரம்பத்தில் வகைப்படுத்தப்பட்டன. அதாவது, நேரடியாக ஈடுபடுவோரைப் பாதிக்கின்றவை அல்லது மோதுகையின் விரிவகல்வான சூழமைவில் மாற்றத்தை ஏற்படுத்துபவை; ஆயினும், இன்று இதுபற்றிய கலந்துரையாடல்கள் குறிப்பிடத்தக்க வகையில் நுண்ணிய வேறுபாடுகளை அதிக அளவில் கொண்டவையாக உள்ளன.



# 4. மோதுகை முகாமைத்துவக் கோட்பாடுகளின் சூழமைவில் சொல்லாடல் செய்திட்டங்கள்

சொல்லாடற் செய்திட்டங்களின் வெற்றியை மதிப்பீடு செய்வது எவ்வாறு? பேச்சுவார்த்தைக்கு முந்திய சொல்லாடற் செய்திட்டங்களின் வெற்றியானது மூன்று மட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட முடியுமென்று கிறிஸ் மிற்செல் முன்மொழிந்துள்ளார்(1993, 82ff):

* சம்பந்தப்பட்டவர்கள் மீதான தாக்கம் (மனப்பாங்கில் மாற்றம், நடத்தையில் புதிய பாணிகள்).
* வெளித்தருகைகள் குறிப்பாக- அரசியல் அடைவிலக்குக்கான கொள்ளப்படும் கருத்துக்கள், முன்மொழிவுகள், நடைமுறை நடவடிக்கைகள் ஆகியன.
* ஒட்டுமொத்த மோதுகை மீதான நீண்டகாலத் தாக்கம்.

முதலாவது மட்டம் பற்றிய குறிப்புரைகள் கூறுவது ஒப்பு நோக்கில் சுலபமானது ஆகும். ஏனெனில், இப்போது சமூக உளவியல், குழு அசைவியக்கவியம் பற்றி பல ஆராய்ச்சிகள் வந்துள்ளன. அவற்றிலிருந்து நாம் வேண்டும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்தகைய கருத்துக்கூறல், பெரும்பாலும் உடன்பாட்டுத் தன்மை கொண்ட அபிப்பிராயங்களுடனான தொடர்பாடலை முதன்மைப்படுத்தும் இயல்பினதாகக் காணப்படும். இதுவரையும் இரண்டாம் மற்றும் மூன்றாம் மட்டங்களின் மதிப்பீடுகள், அமைப்பாளர்களால் நடாத்தப்பட்ட நேர்பு ஆய்வுகள் மற்றும் மோதுகைப் பிரதேசங்களில் அவர்களுக்கிருக்கும் தொடர்புகள் என வருபவற்றை முற்றுமுழுதான அடிப்படையாகக் கொண்டே அமைந்திருந்தன. உதாரணமாக, றொனால்ட் /பிஷர் என்பார் 1965க்கும் 1995க்குமிடையே நடாத்தப்பட்ட

செயலமா்வுகள் தொடா்பாக 76 அறிக்கைகளைக் கணிப்பீடு செய்து அவற்றுள் 84 சதவிகிதமானவை வெற்றியடைந்ததாகத் தெரிவித்துள்ளாா் (1997, 187ff). இத்தகைய நோ்நிலைச் சுய-மதிப்பீடு எவ்வளவு புரிந்து கொள்ளத்தக்கதாக இருந்தாலும், வெற்றியை எய்தும் பொருட்டு எத்தகைய சொல்லாடல் எத்தகைய தாக்கத்தையும் நீண்டகால விளைவுகளையும் மேம்படுத்தப் போகின்றது? (மூன்றாந்தரப்பு உள்ளிட்ட) எவ்வகைப்பட்ட மக்களுக்கு, எத்தருணத்தில், என்ன அளவுத் திட்டத்தில் அது உதவி செய்யப் போகின்றது என்பது குறித்து, மிக அரிதாகவே அது கூறுவது வருந்தத்தக்கதாகும்.

எத்தகைய தன்மையைக் கொண்டதாகவிருப்பினும் உரையாடலின் திட்ட வட்டமான ஒரு கோட்பாடு மற்றும் நடைமுறை என்பவற்றின் சட்டகத்தினுள்ளிருந்து மட்டும் இவ்வினாக்களுக்கு விடையளிக்க முடியாதென்பது தெளிவாகத் தோன்றுகின்றது. இது பேரியல்பு அரசியல் மோதுகையின் விரிவகல்வான சூழமைவைக் குறித்துக் காட்டுகின்றது(ஹொப்மன் 1995).

பொதுவாக, குழுக்களிடையிலான மோதுகை முகாமைத்துவத்தின் கோட்பாட்டு ரீதியான ஆய்வு, இன்னும் அரைகுறை நிலையிலேயே விருத்தி செய்யப்பட்டுள்ளது. உண்மையான மோதுகைச் சூழ்நிலையில் பயன்படுத்தப்பட வேண்டியுள்ள பொருத்தமான மூலோபாயங்கள் தொடா்பிலான நடைமுறை அனுபவங்களிலிருந்து இயல்பாகவே எழுந்துள்ள அநேகமான உருப்படியான வினாக்கள் இன்னும் பதிலளிக்கப்படாமலேயே உள்ளன. விரிவான கோட்பாட்டு ரீதியிலான கலந்துரையாடல்கள் மற்றும் அவற்றின் பரிசோதனை அனுபவ அறிவுசாா்ந்த செவ்வை பாா்த்தல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட பயனுள்ள பரிந்துரைகள் மிகச் சிலவே இதுவரை மேற்கொள்ளப்பட்டுள்ளன. இச்சூழமைவில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள மிக உயா் தோற்றப்பாட்டு அணுகுமுறைகள் என்பன நலன் நோக்கிய பிணக்குத் தீா்வின் நியம விதியொழுங்கு ரீதியான எண்ணக்கருக்களும் (பிஷா் மற்றும் யூரி 1981), ஒப்பீட்டளவான விடய ஆய்வுகளும் (சாா்ட்மன் 1985) மற்றும் சமாதானமாகத் தீா்த்து வைக்கப்பட்டுள்ளது போல் தோன்றும் மோதுகைகளும் ஆகும்.



பண்புகள் பற்றிய ஒரு பரிசோதனை அனுபவ அறிவு மற்றும் அளவு சாா்ந்த ஆய்வுமாகும் (பெர்கோவிச் மற்றும் ஹீஸ்டன் 1996). சமூக மாற்றங்களின் அல்லது மோதுகைகளின் கோட்பாடுகளைத் தெளிவான துணையாதாரமாகக் கொள்வது ஒரு விதிவிலக்காகவே உள்ளது.

எந்த அளவுகோல் மூலம் இடையீட்டின் தனித்தனி நடவடிக்கைகள் அல்லது நிகழ்ச்சித் திட்டங்கள் என்பவற்றின் வெற்றி அளவிடப்பட வேண்டியுள்ளதோ, அந்த அளவுகோல் யாதென தீா்மானிக்கும் விடயத்திற்கு வருகையில், இக்கோட்பாட்டு இடைவெளி குறிப்பாகப் புலனாகிறது. சமூகச் சிக்கல்கள் காரணமாக, நுண்ணியல்பு நடவடிக்கைகளுக்கும் பேரியல்பு விளைவுகளுக்குமிடையே ஒரு தற்காலிக இணைப்பை ஏற்படுத்துவது வழமையிலும் பாா்க்கக் கடினமானதாக உள்ளது. ஆகவே இவ்விடைவெளி குறித்துத் தெளிவான கவனத்தைச் செலுத்தவும், மோதுகை முகாமையைச் செயற்படுத்தல் மற்றும் அதன் ஆராய்ச்சி என்பவற்றின் பெரும் பகுதிக்கு அடிப்படையாக விளங்கும் சொல்லில் வடிக்காத எடுகோள்களைத் தனித்தனியே எடுத்துச் சோதனையிடுவதற்குமான ஒரு வழியைக் காண்பது எல்லா வகையிலும் அவசியமானதாகும்.(கிலேபோா் 1996, ரொஸ் மற்றும் ரொத்மன் 1999) இதை நாம் செய்யத்தவறும் பட்சத்தில், சமாதான உருவாக்கமானது ஆதிக்கத்தின் தொடா்புகளை உறுதிப்படுத்துதல் (பிரான்சிஸ் 2003) அல்லது சமூக உறவுகளின் விரிசல்களை வெறுமனே பூசிமெழுகுதல் என்பதுடன் சமப்படுத்தப்படும் மிக மோசமான ஆபத்தொன்று காத்திருக்கிறது.

இருப்பினும், அண்மைக்காலங்களில் கோட்பாட்டுக்கும் நடைமுறைக்குமிடையே ஒருவித *மறுசீரிணைவு* இருப்பதை நாம் அவதானிக்கத் தொடங்கியிருக்கின்றோம் இதன் சுட்டிகள் அபிவிருத்தி ஒத்துழைப்பு போன்ற நிறுவப்பட்ட செயற்பாட்டுக்களங்களில் மோதுகை முகாமைச் செயற்பாடுகளின் பயனுறுதியான பயன்பாட்டிற்கான அளவுகோல்களை உருவாக்குவதைக் குறிக்கோளாகக் கொண்ட பல்வேறு நவீன மீளாய்வுகளிலும் மற்றும் மோதுகைத் தாக்க மதிப்பீட்டு ஆய்வுகளிலும் ஆதார பூா்வமாகத் தென்படுகின்றன.(லுண்ட் மற்றும் ரசமோலினா 2000).

கோர்டியுலா ரெயிமான் (இவரின் பங்களிப்பை இப்பாகத்தில் காண்க) என்னும் பெண் எழுத்தாளர் மோதுகை முகாமைக்கான கோட்பாட்டு மற்றும் செயற்பாட்டு ரீதியான அணுகுமுறைகள் இரண்டையும் வகைப்படுத்துவதில் மூன்று ஆதர்ச/வகையுதாரணப் பிரிவுகளை முன்மொழிந்துள்ளார். அவரது வகைப்பாட்டு முறையியலானது சொல்லாடற் செய்திட்டங்களின் மேலும் துல்லியமான கருத்தியல் ரீதியான ஒரு வகைப்படுத்தலையும் அவற்றின் வெற்றியை அளவிடுவதற்கான அளவுகோல்களையும் அனுமதிக்கின்றது(காண்க பெட்டி 1) ஒரு பிரிவினுள் கிடைக்கும் வெற்றிகள் ஏனையவற்றுக்கும் பிரயோகிக்கப்படலாமென எளிதாகக் கருதிவிடமுடியாது என்பதையும் அவரால் முன்வைக்கப்படும் வகைபாடு தெளிவுபடுத்துகின்றது.

மோதுகைத் தீர்வு அணுகுமுறையானது, கடுமையான அல்லது கட்டு மீறும் உள்ளார்ந்த தன்மையைக் கொண்ட மோதுகை தோன்றுகையில் அரசியல் ஒழுங்கமைப்பைப் பாதுகாப்பதையும் அல்லது சீரசெய்து கொள்வதையும் அத்துடன் அதிகாரத்தைத் தாங்கி நிற்கும் பல்வேறு தலைமைத்துவக் குழுக்களின் நலன்களிடையே உருப்படியான ஒரு சமநிலையைப் பெற்றுக்கொள்வதையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்தக் கட்டுக்கோப்பினுள்ளே,சொல்லாடல் செய்திட்டங்களால் மதியுரைஞர்கள் மற்றும் செல்வாக்குள்ள நபர்கள் மட்டத்திலே நடத்தப்படும் அதிகார பூர்வ பேச்சுவார்த்தைகளுக்கான பயன்பாட்டை நன்கு அளவிட முடியும். விசாலமான பரப்புடைய சோல்லாடலுக்கான முன்னெடுப்புக்களை நகர்த்திச் செல்லுதல் மற்றும் குறைந்தபட்சம் ஊடகத்துறையின் ஒரு பிரிவிலாவது அவற்றுக்கான நேர்நிலைப் பதிற் செயற்பாட்டை வெளிக்கொணர்தல் என்பவற்றின் சாத்தியப்பாட்டை அது நிரூபிக்குமேயானால் பேச்சு வார்த்தைக்கான ஓர் உகந்த சூழ்நிலையையும் சொல்லாடற் செய்திட்டங்களால் இந்த மட்டத்தில் உருவாக்கமுடியும்.

அதிகாரபூர்வ பேச்சுவார்த்தைகளைச் சூழவுள்ள பொதுவான கட்டமைப்பைப் பரிசோதிக்கும் நேர்பு ஆய்வுகள் ஒப்பீட்டளவில் எண்ணிக்கையில் குறைவாக இருப்பது, சிவில் சமூகத்தின் உரையாடற் செய்திட்டங்களின் பெறுபேறுகள் மிக அரிதாகவே அதிகாரபூர்வ நடவடிக்கைகளாக நேரடியாக நிலை மாற்றப்பட்டுள்ளன என்பதை காட்டுகின்றது. இவ்வகைப்பட்ட பிரசைகள் பங்கேற்புக்குறித்த அதிகாரபூர்வமான கொள்கை வகுப்போர் குறிப்பிடத்தக்க உளவியல்ரீதியான மற்றும் நடவடிக்கைமுறை ரீதியான சந்தேகங்களுக்குத் தொடர்ந்தும் இடமளித்தே வருகின்றனர். மறுபுறத்தே, மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரபூர்வ ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ள மூத்த இராஜ தந்திரியாள ஜிம்மி கார்ட்டர் போன்ற நம்பிக்கைக்குப் பாத்திரமான நபர்களை நியமிப்பது குறைவான பிரச்சினைகளை முன்வைப்பதாகத் தோன்றுகிறது. எனவே சோல்லாடற் செய்திட்டங்களால் பிரயோகிக்கப்படும் செல்வாக்கானது மறைமுகமானது என்னும் சார்புநிலையில் நீண்டகால அடிப்படையைக் கொண்டவை என்று கருதப்பட வேண்டும். எதிர்காலத்தில் தலைவர்களாக வரக்கூடியவர்களை சமூக மயப்படுத்தல், தனிப்பட்ட உறவுகளின் வலையமைப்புகளை உருவாக்கல் மற்றும் 1993இல் இஸ்ரேல்-பாலஸ்தீன உடன்படிக்கைக்கு முன் கெல்மனின் ஆயத்த நடவடிக்கைப் பயன்பாட்டினால் செய்து காண்பிக்கப்பட்டவாறு (தெல்மன் 1995) பாதுகாப்பான பொதுவரங்குகளில் புதிய கருத்துக்களைப் பகிரங்கப்படுத்தல் ஆகிய செயற்பாடுகளுடன் இது தொடர்புற்றுள்ளது.

அதிகார பூர்வ மற்றும் அதிகாரபூர்வமற்ற சாணக்கியத்திற்கு இடையிலான வெளி என்பது, வெறுமனே அரசுகளுக்கும் சிவில் சமுதாய உலகுக்குமிடையே வேறுபட்டு நிற்கின்ற சட்டபூர்வத்தன்மை மற்றும் அதிகார-அரசியல் விருப்புத் தெரிவுகள் என்பன பற்றிய ஒரு விளக்கமல்ல. சோல்லாடலை அடிப்படையாகக் கொண்ட அணுகுமுறைகளின் பரிந்துரையாளர்களில் அநேகர், மோதுகை பற்றிய அடிப்படையிலேயே வேறுபட்ட ஒரு விளக்கத்தையும் இது பிரதிபலிப்பதை அவதானித்துள்ளனர். அவர்களின் பார்வையில், நீண்டகாலம் நிலவும் மோதுகைகள் என்பன பாதுகாப்பு அங்கீகாரம் மற்றும் பங்கேற்பு என்பவை தொடர்பான அடிப்படைத் தேவைகள் மற்றும் சமூக மாற்றத்துக்கான விருப்பம் என்பவற்றைத் திருப்திப்படுத்தத் தவறியமையின் ஒரு தெளிவான அடையாளமாகக் காணப்படுகின்றன.(போர்ட்டன் போர்ட்டன் மற்றும் டியூக்ஸ் 1990). எனவே பொருண்மை மோதுகைகளை ஒரு புதிய சூழமைவில் அமைத்து அவற்றை ஒரு பகிரப்பட்ட பிரச்சினையாக எதிர்கொள்ள ஆரம்பிக்கும் பொருட்டு, மேலும் தெளிவான

பொருண்மை மோதுகை விடயங்களை கையாள்வது மட்டுமல்லாமல், தரப்பினர்க்கிடையேயான குழம்பிய நிலையிலுள்ள உறவுகளையும் கையாள்வது மோதுகைத் தீர்வின் பணியாகவுள்ளது.

சொல்லாடற் செய்திட்டங்கள் உண்மையிலேயே மோதுகைத் தீர்வு அணுகுமுறைக்கான முக்கியமான ஒரு கருவியாக இருப்பது ஏனெனில், முதலில், புலனுணர்வுகள் மற்றும் உறவுகள் பற்றிய பரஸ்பரத் தெளிவு படுத்தல்கள் மற்றும் தொடர்பாடலில் முன்னேற்றங்கள் என்பன அதன் பிரதான நோக்கங்களாக இருக்கின்றமையாகும். அப்படியிருக்க, சொல்லாடற் செய்திட்டங்களில் அநேகமானவை, ஒப்பீட்டளவில் சுருக்கமான விவகாரங்களாகவும் நீண்டகாலத்திற்கு நிலைத்துநிற்க முடியாதனவாகவும் உள்ளன. ஆயினும், எங்கு இது வெற்றிகரமாக முகாமை செய்யப்படுகின்றதோ, அங்கு பெறுமதியான சோல்லாடல் அனுபவத்தைக் கொண்டிருக்கின்ற மற்றும் மறுதரப்பினருடனான நெருக்கமான தொடர்பை மதிக்கின்ற மக்கள் குழுவொன்றின் உருவாக்கத்துக்கு இச் செயன்முறை இட்டுச் செல்லும் சாத்தியத்தை வழமையாக அது குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கின்றது. இருந்த போதிலும், எந்த சவால்களுக்கு காலப்போக்கில் இச்செய்திட்டங்கள் முகங்கொடுக்க நேரிடுகிறதோ, அந்த சவால்கள் யாவும், உறவுகளின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் மோதுகைப் பகுப்பாய்வு என்பவை பற்றிய சொல்லாடலானது, நடைமுறைக்குகந்த செயற்படுத்தல் நடவடிக்கைகளை உள்ளடக்கும் பொருட்டு, எவ்வாறு கூட்டு(ஆய்வு செய்கின்ற) பிரச்சினைத் தீர்வுக்கப்பால் நகர்த்தப்பட முடியும் என்ற வினாவையும் கிளப்பியுள்ளது.

மோதுகை முகாமைத்துவத்துக்கான மூன்றாவது அணுகுமுறையானது மோதுகை மற்றும் மோதுகைத் தீர்வு என்பவற்றின் எண்ணப்போக்குகள் மீது மேலும் கட்டியெழுப்பப்படுகின்றது. ஆனால் அது கட்டமைப்பு ரீதியான மாற்றங்களுக்கான தேவைமீது மேலதிக அழுத்தத்தை வைக்கின்றது. மோதுகை மாற்றுநிலையாக்கத்தின் கோணத்திலிருந்து பார்க்கும் போது பிளவுபட்ட சமுதாயங்களிலும் யுத்தத்தினால் மனவதிர்ச்சிக்குள்ளாகிய சமுதாயங்களிலும் நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்தை உருவாக்குவது என்பது, ஒரு புறத்தே, சமூக பொருளாதார சமத்துவமின்மைகளை அகற்றுவதையும், மறுபுறத்தே, அதில் ஈடுபட்டுள்ளவர்கள் (இனக்குழும) பன்மைத்துவத்திற்கு ஈடுகொடுத்து வாழ்வதை நடைமுறைப்படுத்தும் அரசியல் மற்றும் சமூகத்திறன்களைக் கட்டியெழுப்புவதையும் குறிக்கோளாகக் கொண்ட நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்படுவதை வேண்டி நிற்கின்றது. இக்கட்டுக்கோப்பினுள் சோல்லாடற் செய்திட்டங்கள் பெறுமதி மிக்க பாலத்தினை அமைக்கும் கருமத்தைப் புரிய முடியும். அவை அளவிடப்படுவதற்கான பிரதான உரைகல், அவை எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டவர்களின் வாழ்க்கை நிலையை மாற்றுவதற்கும், தீர்வு மூலம் பிரச்சினைகள் ஆக்கப்படும் பண்பாட்டை எடுத்துக் காட்டுகின்றன என்பவற்றின் அடிப்படையிலேயே அந்த உரைகல்லானது அமைதல் வேண்டும். **பதிலாக, எவ்வாறு மற்றும் எந்த அளவுக்கு மோதுகையிலுள்ள பிரிவினரிடையில் பாலம் அமைக்கும் நடவடிக்கைகளும் கூட்டு நடவடிக்கைகளும் இதில் ஈடுபட்டிருப்போர் மீது கூடுதலான வலுவளிக்கும் தாக்கத்தைக் கொண்டிருக்க முடியும் என்ற வினாவை இது முன்வைக்கின்றது.**



இவ்வகைப்படுத்தலிலிருந்து தெளிவாகத் தெரிவது யாதெனில், சம்பந்தப்பட்ட குறிக்கோள்களையும் சூழமைவையும் பொறுத்து, சொல்லாடற் செய்திட்டங்களின் வெற்றிக்கு வெவ்வேறு அளவுகளை பிரயோகிக்கவேண்டிய நிலைக்கு நாம் செல்லப் போகின்றோம் என்பதாகும். மோதுகை முகாமையில் வழமையாக இருப்பதுபோல் வெற்றியென்பது பெரும்பாலும் பன்முகங்கொண்ட ஒரு புலன் நிகழ்வு. சமகால விளைவுகள் நோக்கத்திசைமுகப்படுத்தப்பட்டனவும் முறைவழி பற்றித் திசைமுகப்படுத்தப்பட்டனவும் மற்றும் கட்டமைப்பு நோக்கித் திசைமுகப்படுத்தப்பட்டனவுமான அணுகுமுறைகள் மூலமாகத்தான் மோதுகைகள் மாற்றுநிலையாக்கப்படுகின்றன என்னும் மோதுகை மாற்றுநிலையாக்க எடுகோளை நாம் ஏற்றுக் கொண்டால், இவ்வகையான செய்திட்டங்கள் பல்வேறு மட்டங்களில் சமாந்தரமாக மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்பது தெளிவாகிறது. இதற்குச் சான்றாக அண்மைய வருடங்களில் அடிக்கடி எடுத்துக்காட்டப்படுவது யாதெனில் **“சமாதான வட்டாரங்கள்”**

**அல்லது "சமாதான கூட்டுகள்" என்பவற்றின் மாதிரியாகும். (லெடராஜ் 1997) எனினும் சமாதான வட்டாரங்களின் உருவாக்கத்துக்கு உரையாடற் செய்திட்டங்கள் என்ன பங்களிப்பைச்** செய்யலாம் அல்லது செய்யவேண்டும் என்ற

பெட்டி : மோதுகை முகாமைத்துவ சந்தர்ப்பங்களுக்காக பல்வேறு அணுகுமுறை தொடர்பான சொல்லாடற் செய்திட்டங்களின் பொறுப்பு

| மோதுகை முகாமைத்துவ அணுகுமுறை | மோதுகை எண்ணக்கரு | உசிதமான வழக்கத்திற்குரிய அணுகுமுறை | வெற்றியின் அளவீடு | சம்பாசணை செயற்திட்ட பொறுப்புகள் முன்-ஒப்பந்த நிறுவனங்கள் |
|---|---|---|---|---|
| மோதுகையை தீர்த்தல் | மோதுகை தரத்ததை பாதுகாத்தல் மற்றும் அரசியல் நியமங்கள் தொடர்பான பிரச்சினையாக மோதுகை சமூக மாற்றத்தின் மாற்றமடையா | தடம் - 1 இராஜதந்திரம் மற்றும் உத்தி யோகப்பூர்வ தலைமைத்துவ மட்டத்தில் திக்க அரசியல் | பயன் ஸ்தீரமானது: நிலைப்படுத்துவதன் பிரதிபலன் எதிர்பார்த்த அரசியல் சுமுகத்தீர்வு நடவடிக்கை ஸ்தீரமானது | புரிந்துணர்வு தொடர்பான அரசியல் நிலை மையை விருத்தி செய்தல் |
| மோதுகை தீர்வு | உந்து சக்தியாக | தடம் - 2 நேரடி சிவில் சமூகு மோதுகை முகாமை | கட்சி களுக்கிடையில் தொடர்பாடல், இடைச்செயற்பாடு மற்றும் தொடர்பு கள்: பல்வறு ஒருங்கிணைந்த தனித்துவத்திற்கு மதிப்பளித்தல் | சம்பாசணை திறனுள்ள தலைவர் குழாமொன்றை உருவாக்கல் தொர்பாடல் மோதுகை தீர்வு போன்றவற்றிற்கான செயலமர்வு |
| மோதுகை மாற்று நிலைப்படுத்தல் | .மோதுகை சமூக நியாயத்திற்கான அஹிம்சை புரட்சியாக | தடம் - 3 மோதுகை மற்றும் நடைமுறைப்படுத்த, தடுப்பதற்கு பலவினமான குழுக்களின் திறன்களை விருத்தி செய்தல் மற்றும் யுத்த பீதிக்குள்ளாகி இருக்கும் சமூகத்தை ஒருங்கிணைப்பதற்காக திறனை விருத்தி செய்தல் த்துவம், விசடமாக மத்திய தர தலைமைத்துவ மட்டத்தில் | அமைப்புரிதியாக ஸ்தீரமானது: தனித்துவ குழுக்க ளுக்கிடையில் சமூக பொருளா தார வேறுபாடு களை ஒழித்தல் ;<br><br>சிறப்பாட்சி: அதிகாரத்தை பகி ர்ந்து கொள்ளல் : சமூக அமைப்பின் அங்கமாகும் வகை யில் சிவில் சமூக அமைப்பொன்றை கட்டியெழுப்புதல்: அடிமட்டத்தில் மோதுகை முகா மைத்துவ உள் பரிமானத்தை கட்டி யெழுப்புதல் | தொடர்பாடல் மற்றும் இடைச்செயற்பாட்டு திறனை மேம்படுத்தல்<br><br>எதிரிடை தன்மைகளுக்கிடையில் ஒற்றுமையை காணும் குழுக்களுக்கிடையில் சந்தித்தல் மற்றும் ஆராய்ச்சி சந்தர்ப்பங்களுக்காக அவகாசத்தை ஏற்படுத்தல்<br><br>குழுக்களுக்கு அதிகாரமளித்தல் |

325

வினா இதுவரை பெரிதாக ஆராயப்படவில்லை. இவ்வினாவுக்குரிய விடைக்கான சாத்தியமான ஒரு வழியானது, கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் தனித்தனிச் செய்திட்டங்களை மிகவும் விரிவாகச் சோதித்து ஆராய்ந்துள்ள மிகச்சிறந்த நடைமுறை ஆய்வுகள் என்பவற்றினால் வழங்கப்படுகிறது.

## 5. கற்றுக் கொண்ட படிப்பினைகள்

பின்வரும் ஒன்பது "படிப்பினைகள்" பட்டியலானது பிரசுரிக்கப்பட்டதும் பிரசுரிக்கப்படாததுமான பல மூலங்களிலிருந்து பெறப்பட்டவையாகும்.( 1999 ஹோமர்சென/ரேட்மார்சா;ஸ்பென்சர் 1998, சார்ல்ஸ் ஸ்ரூவார்ட் மொட் மன்றம் ரோப்பர்ஸ் 2002, வொலே 2002). அத்துடன் காகசஸில் உள்ள மோதுகைகள் பற்றி கட்டுரையாளர் நடாத்திய பிரச்சினை தீர்க்கும் செயலமர்வுகளில் சுருக்கமாக கிடைத்த தன் சொந்த அனுபவங்களிலிருந்தும் பெறப்பட்டவையாகும். சுருக்கமாக இருக்க வேண்டுமென்ற நோக்கில், அரசியல் பேரியல்பு மோதுகையின் மீது செல்வாக்கச் செலுத்துவதைக் குறிக்கோளாகக் கொண்ட கருத்திட்டங்களுடன் தொடர்புடைய அம்சங்கள் மீதே கவனக்குவிப்புச் செய்யப்பட்டுள்ளது.

* நீண்டகாலம் நிலவும் மோதுகைத் தரப்பினரிடையேயான பிரச்சினை தீர்க்கும் உரையாடலொன்றின் பேராவல் மிக்க குறிக்கோளானது *பணியாற்றிப் பலனறிதல் எனும் நீண்டகாலச் செயல்முறைக் கட்டுக்கோப்பின்* உள்ளிருந்து மட்டுமே எய்தப்பட முடியும். உருப்படியான பிரச்சினை பற்றிய எந்தத் தன்னிலையான கலந்துரையாடலுக்கும், தனிப்பட்ட நம்பிக்கையைக் கட்டியெழுப்புதல், நிலைப்பாடுகள் மற்றும் புலனுணர்வுகள் பற்றிய தெளிவுபடுத்தல்கள் மற்றும் பின்புலத்தின் உண்மைகள் என்பன முக்கியமான முன் தேவைகளாகும். உதாரணமாக, குழுவிற்குள்ளேயே மோதுகையை மோசமாக்கும் செயல்முறைகள் மற்றும் வெளியிலிருந்து மோதுகையை மோசமாக்கும் செயன்முறைகள் அத்துடன் வெளியிலிருந்து வரும் அச்சுறுத்தல்களும் மற்றும் ஏனைய செல்வாக்குகள் ஆகிய *நெருக்கடிகளைக் கூட்டாகக் கையாள்வதன் மூலமும்,* தமது தாயக வட்டாரம் தொடர்பில், ஏற்றுக் கொள்தலின் ஒரே மாதிரியான பிரச்சினைகளை அனைத்துப் பங்கேற்பாளர்களும் கொண்டுள்ளனர் என்ற உணர்வின் மூலமும் *முக்கிய வகிபாகம் ஒன்று இங்கு அரங்கேறுகிறது.* மேலும் முக்கியமான விடயம் யாதெனில், கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஒழுங்குகள்-உதாரணமாக பேச்சுக்களின் இரகசியத்தன்மை குறித்த உடன்பாடுகள் அல்லது நடைமுறைப் பிரச்சினைகளின் தீர்வுகுறித்த உடன்பாடுகள் என்பவற்றின் நேர்நிலையனுபவத்தை அனைத்துப் பங்கேற்பாளர்களும் கொண்டிருக்கவேண்டும் என்பதாகும். எனவே இத்தகைய நீண்ட காலச் செயல் முறையொன்றை உண்மையிலேயே தம்மால் பயன்மிக்க வகையில் உறுதிசெய்ய முடியுமா என்பதை முயற்சியெடுக்கும் மூன்றாந்தரப்பு அவசியம் எண்ணிப்பார்த்தல் வேண்டும். (நடைமுறையில், இச் செயல்முறை பல வருடங்களுக்கு நீடிக்கலாம்). மிக மோசமான ஒரு காட்சிச் சூழலில், சொற்ப அளவிலான கூட்டங்களே அல்லது ஒரு கூட்டம் மட்டுமே நடாத்தப்பட்டால், பல பிரச்சினைகள் கிளறி விடப்படும், ஆனால் பங்கேற்பாளர்களின் நம்பிக்கையீனம், இறுதியில் முன்பிருந்ததைக் காட்டிலும் அதிகமாகவும் இருக்கும் என்பதற்கான சாத்தியப்பாடுகளை குறித்த ஒருவர் நன்கு கணித்துக் கொள்ளவேண்டும்.

* சொல்லாடற் செயல்முறையொன்று நல்லவிதமாக ஆரம்பிக்கப்பட வேண்டுமானால், *ஆரம்பக் கொள்கை பரிந்துரையாளர்களின் தெரிவும்* மிகவும் தீர்மானகரமானதாகும். முதலில் இப்பங்கேற்பாளர்கள், தாம் சிலவகை அர்த்த புஷ்டியான சொல்லாடல் வெற்றிகரமாக ஆரம்பிப்பதில் திறமை படைத்தவர்கள் என்பதை நிரூபிக்க வேண்டும். இது மிதவாதப்போக்கில் அதிக நாட்டமுடைய சார்புப் பேச்சாளர்களின் ஈடுபாட்டை மிகுதியாக ஆதரிப்பதற்குத் தேவையான ஒன்று. அடுத்து பங்கேற்பாளர்களின் இந்த முதல் தெரிவானது, இம்முயற்சி செயல் முனைப்புடன் கூடிய ஒன்றா அல்லது வெறுமனே வெளிநபரொருவரின் அல்லது துரோகியொருவரின் முயற்சி என்ற வகையில் நிராகரிக்கப்படுகின்ற ஒன்றா என்பதைத் தீர்மானிப்பதற்கு உதவக்கூடிய ஒரு சமிக்ஞையாகவும் செயல்படுகிறது.

எனவே இந்த ஆரம்பக் கட்டத்தில் மிதவாதப் போக்குடையோர் மற்றும் சிறந்த வலையமைப்பினையுடைய பெரும் போக்குடையோர் ஆகியோரின் ஒரு கலப்புக் குழுவொன்றைக் கொண்டிருப்பது குறித்து அதிகம் கூறவேண்டியுள்ளது. அதேவேளை, இடைக் காலத்தில், கடும்போக்காளர்களை இச்செயல்முறைக்குள் கொண்டு வரும் பொருத்தமான வழிவகைகள் பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளது. 'கொண்டு வருதல்' என்ற வுடன் கூட்டத்தில் பங்கு பற்றுவதைத்தான் அது தானாகவே கருதுகின்றது என்பதல்ல, ஆரம்பத்தில், அவர்களது அக்கறைகள் மற்றும் எதிர்ப்புக்கள் பற்றிய ஒரு சம்பாஷணையில் அக் கடும் போக்காளர்களை ஈடுபடுத்துவதற்கான முயற்சிகளை மட்டும் அவை கொண்டிருக்கலாம். ஐயத்திற்கிடமின்றி வன்முறையை ஆதரிப்பவர்கள் சொல்லாடல் முயற்சியொன்றில் ஈடுபட எவ்வகையிலும் பொருத்தமுடையவராகார். எவ்வாறாயினும், குழப்புவதற்கும் எதிர்ப்பதற்குமான அவர்களின் உள்ளார்ந்த இயலுமையைத் துல்லியமாக மதிப்பிடுவது முக்கியமாகும்.

* மக்கள் நம்பிக்கைக்கு மாறாக, சொல்லாடற் செய்திட்டங்கள் எதிர்கொள்ளும் உண்மையான அளவுகோலானது, இந்த அமர்வுகளுக்கு நிதியளித்தல், ஆயத்தம் செய்தல் மற்றும் நடாத்துதல் என்பவற்றுக்குத் தேவையான *அமைப்பு ரீதியான உள்ளீடுகளுக்கு இருப்பதை விட,* உண்மையான சந்திப்புகளின்போது, இலகுபடுத்துதல் முறைகள் மற்றும் தொடர்பாடல் உபாயங்கள் என்பனவற்றின் பயனுறுதியான பயிற்சித் தேர்வுக்கு குறைவாகவே உள்ளது. பிளவுண்ட சமுதாயங்கள் மற்றும் உட்கட்சிப் பூசல்களால் பிளவுபட்ட சமுதாயங்கள் என்பனவற்றின் சூழமைவில், இவ்வாறான சொல்லாடற் செய்திட்டமொன்றை அரங்கேற்றுவதற்கான யோசனையை அறிவித்தாலே போதும், பொறுப்பான அதிகாரபீடங்களாலோ அல்லது அதிகாரத்தைக் கொண்டிருப்போராலோ வெளிப்படையான தடைகள் இல்லாவிட்டாலும், அங்கு பெரும்பாலும் நம்பிக்கையீனமும் மறுப்பும் ஏற்பட்டுவிடும்.இக்காரணத்தினால், குறிப்பிட்ட நாட்டுக்கு வெளியே கூட்டங்கள் நடாத்தப்படுவது அவசியமாகலாம். இதற்கு உயர்ந்தளவிலான வசதி வாய்ப்பு ஏற்பாடுகள் மற்றும் நிதி போன்ற உள்ளீடுகளும் தேவைப்படும். இக்கூட்டங்களுக்காக முன்னாயத்தம் செய்தற் பொருட்டு, இருசாரார் பற்றியும் பல்வேறு விரிவான ஆய்வு பூர்வமான பேச்சுக்களை மூன்றாந்தரப்புப் பிரதிநிதிகள் நடாத்த வேண்டியது அவசியமாகலாம் என்பதுடன், நாடுகளுக்கிடையேயான பயணங்களை மேற்கொண்டு சர்வதேச ரீதியில் பேச்சுக்களை நடாத்துவதன் மூலம், குறைந்த பட்சம் ஆலோசிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பங்கேற்பாளர் பட்டியல் என்பவை குறித்தாவது ஒரு கருத்தொருமைப்பாட்டைப் பெறுதலும் அவசியமாகும். இவ்வணுகுமுறைகளின் பொருத்தப்பாடுகுறித்த கலந்துரையாடலில் இந்நடவடிக்கைகள் பெரும்பாலும் பின் ஆசனத்தை எடுத்தாலும், இவைகள் தம்மில் தாமே விரிவான சொல்லாடற் செய்முறையின் பகுதியாகின்றன.



* எவ்வளவுதான் நல்வகையான நோக்கத்தை கொண்டிருந்தாலும், எந்த ஒரு இடையீடும், திட்டமிடப்பட்ட மற்றும் திட்டமிடப்படாத இருவகை விளைவுகளையும் கொண்டிருக்கிறது. எனவே தமது செயற்பாடுகளின் விளைவுகளை-குறிப்பாக, திட்டமிடப்படாததாக அல்லது எதிர்பார்க்கப்படாதவையாக இருப்பினும், உருவாகக் கூடியவையிலிருந்து நிகழக்கூடியவை வரை வேறுபடக்கூடிய விளைவுகளைக் கவனமாகச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய *ஒரு நெறிமுறைசார் பொறுப்புணர்வினை* சொல்லாடற் செய்திட்டங்களின் முன் முயற்சியாளர்கள் கொண்டுள்ளனர். இவற்றுள் முதலாவதாக வருவது கூட்டத்திற்கு அழைக்கப்பட்டவர்கள் மீது திணிக்கப்படும் பாதுகாப்புக் குறித்த இடர்களைக் கணக்கிட்டு அவற்றை இயலுமானவரை குறைக்கும் பணியாகும். உதாரணமாக, மிகவும் சமச்சீரற்ற மோதுகைகளில், பலவீனமான தரப்பு அதி தீவிரமான ஒரு நிலைப்பாட்டை எடுப்பதற்கான நிலைமைக்கே உரையாடலொன்றிலான பங்கேற்பு பெரிதும் இட்டுச் செல்லும். இறுதியாக, கடுமையான மோதுகை ஒன்றில் இடையிடல் செய்யும் யாதேனுமொரு மூன்றாந்தரப்பு தன் "பல்சார்புடைத் தன்மையைப்" பேணுவதிலுள்ள சிக்கலை கருத்திலெடுக்க வேண்டும். குறிப்பாக ஒரு சாரார் மற்றொரு சாராரிடமிருந்து மிகப் பெரிய அளவிலான மனித உரிமை மீறல்களை எதிர்கொள்கையில் இந்நிலைமை உருவாகும்.

* பொதுவாக, ஊடாட்டமான மோதுகைத் தீர்வு இயக்கமானது, கல்விப் பகுப்பாய்வுசார், மற்றும் சில வேளைகளில் கோட்பாட்டுறுதிமிக்க முன்முயற்சியாளர்களின் உலகத்தால் வெகுவாகச் செல்வாக்குச் செலுத்தப்பட்ட இலகுபடுத்தற் பணியொன்றுடனான, விசேட வகையான பிரச்சினை தீர்க்கும் செயலமர்வொன்றின் மேலாண்மைக்குட்பட்டு வந்துள்ளது (பிஷர் 1997). ஆயினும், அதிக பரந்த அளவிலான நடைமுறை அனுபவங்களைத் தற்போது நாம் பெறக்கூடியதாக இருக்கையில், மேலும் பரந்த அளவிலான மற்றும் மேலும் நெகிழ்ச்சித்தன்மை கொண்ட அடிப்படையிலான சொல்லாடற் செய்திட்டங்களில் இடையீட்டு முறையியலை ஏற்படுத்துவது குறித்து நாம் அதிகம் பேச வேண்டியுள்ளது. குறிப்பாக, வளர்ந்தோர் கல்வி, கலாசாரங்களுக்கிடையேயான கற்றல்கள், குழு அசைவியக்கம், உளவளத்துணை புரிதல், மேற்பார்வை செய்தல் மற்றும் குறுகிய அர்த்தத்திலான இணக்குவித்தல் என்பவற்றில் பெற்ற அனுபவத்தை சொல்லாடலின் ஒரு துடிப்பான வடிவத்தை உருவாக்குவதில் பயன்படுத்தினால் அது ஒரு சிறந்த யோசனையாக இருக்கும். குழுக்களின் பொருத்தமான கூட்டமைவு மற்றும் குழு தானே மோதுகைகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கையில், குழுநடத்தையிலிருந்து வெளிப்படும் நடத்தைக்கான நியம விதியொழுங்கு சார்ந்த செய்திகளைப் பரிசோதனை செய்தல் ஆகியவிடயங்களுடன் இச் செய்முறை ஆரம்பிக்கின்றது. குழுவின் அசைவியக்கத்தினுள் இருக்கும் வேறுபட்ட போக்குகளை வெளிப்படுத்துவதுடன் அது தொடர்கிறது. இது முக்கியமானது, ஏனெனில், சொல்லாடல்களில் மறுசீரிணைவுக்கு எதிராக, திடீரென்று வெளிப்படையாக மன இறுக்கத்தைக் காட்டுதல் மூலம் அல்லது எதிர்பாராத புதிய விடயங்களைக் கலந்துரையாடலுக்காக எழுப்புதல் மூலம் காட்டப்படும் எதிர்ப்பு பெரும்பாலும் மனதைப் புண்படுத்தும் விதத்திலேயே தன்னை வெளிப்படுத்துகின்றது. இறுதியாக, சொல்லாடலானது, உருப்படியான பிரச்சினை தீர்க்கும் உபாயங்களின் இனங்காணலை நோக்கியதாக எவ்வளவு அதிகமாக அல்லது குறைவாக முடுக்கிவிடப்பட வேண்டும் என்னும் விடயம் பற்றியும் இச் செயல்முறை தொட்டுச் செல்கிறது.



* சொல்லாடல்களில் பங்கேற்போர் மத்தியில் காணப்படும் கண்ணோட்டத்தில் மாற்றங்களை ஊக்குவிப்பதற்குத் தற்போது மிகவும் கூடுதலாகப் பயன்படுத்தப்பட்டு வரும் ஒரு முறை யாதெனில், *ஒரே மாதிரியான ஒரு இனக்குழும -அரசியல் மோதுகை பற்றியும்,* அதிலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய நுண்ணறிவு பற்றியும் சிந்திப்பதற்கான தூண்டுதலாகும். இதில் அடிப்படையான கருத்து யாதெனில், ஒருவர் தன் சொந்த மோதுகையை விடுத்து வேறொன்று பற்றிச் சிந்திக்கையில், சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரினதும் நோக்கு நிலைகளைப் புரிந்து கொள்வதும், ஒட்டுமொத்த சூழ்நிலையின் குறைந்த அளவு முற்சாய்வு கொண்ட மதிப்பீடொன்றிற்கு வருவதும் இலகுவானதே என்பதாகும். ஆகவே, ஒரு கண்ணாடியில் இருக்குமாப்போன்று, ஒருவரது சொந்த மோதகைக்கு புதிய அம்சங்களை இனங்காண்பது என்பது பெரிதும் இயலுமானதொன்றே. தீர்வின் எந்த அம்சங்கள் தனது சொந்த மோதுகைக்கும் பொருத்தமுடையதாயிருக்கும் என்று ஒருவர் கேட்கும் வகையில் எதில் பணியானது அதிக முன்னேற்றகரமான கட்டத்தில் உள்ளதோ, அப்படியான ஒன்று தான் ஆதர்ச வகையில் ஒத்திசைவான விடயமாகும். இருப்பினும் நடைமுறையில், செயன்முறையானது வழமையாக இப்படி மிருதுவாக இருப்பதில்லை. ஒப்பீடு செய்வதில் எந்த ஒரு முயற்சியும், தமது வழக்கிற்கு அர்த்தத்தைக் கொடுக்கின்ற ஒரு பிரதான பகுதியைத் தம்மிடமிருந்து பறித்துவிடும் என்ற எண்ணத்தில், பங்கேற்பாளர்கள் தமது மோதுகையின் தனித்துவம் குறித்து அழுத்தம் கொடுப்பர். இருந்தபோதிலும், பின்நோக்கில், உரையாடல்களின் போது அடையப்பெறும் எந்தத் திருப்புமுனைகளுக்கும் மிக அவசியமானவையெனக் கருதப்பட்டவற்றுள் இச்சிந்தனைப் பரிசோதனைகளும் அடங்கும் என பங்கேற்பாளர்கள் இதனைப் மேற்கோள் காட்டுகின்றனர்.

* மேலே விளக்கப்பட்டவாறு சொல்லாடற் செய்திட்டங்களின் பேரியல்பு அரசியல் விளைவுகளை மதிப்பீடு செய்வது தகாவழிப்பிரசித்தமான விதத்தில் கடினமானதாக உள்ளது. எனவே, *இடைநிலை சமூக மட்டத்தில்* இப்பணியின் சாத்தியமான தாக்கத்தின் மீது மிகவும் நுணுக்கமான பார்வையைச்

செலுத்துவது மிகவும் முக்கியமானதாகும். இங்கு வெற்றியின் முக்கிய நடவடிக்கை ஒன்றாக ஐயத்துக்கிடமின்றிக் காணப்படுவது யாதெனில், பங்கேற்பாளர்களும் மற்றும் அவரவர் சார்ந்த உறவுநிலைக் குழுக்களும் அல்லது அமைப்புகளும், சொல்லாடற் செய்முறை மீது உரிமை கொண்டாடும் மட்டம் ஆகும். விருப்புத் தெரிவுகளைப் பகுப்பாய்வு செய்து பொதுவான இயங்கு தளத்தை ஆராய்ந்தறியுமுகமாக, புலனுணர்வுகள், நிலைப்பாடுகள் மற்றும் நிகழ்வுகள் ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதற்கான தமது முயற்சிகளில், சொல்லாடல் நிகழ்வுகளை முறைசார் வழியில் ஒருங்கிணைக்கும் செயலை அவர்கள் தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனரா?

கருத்தரங்குகளின் வடிவமைப்பில் பங்கேற்பாளர்களின் ஈடுபாட்டு மட்டத்தை வெறுமனே அதிகரிப்பதால் இத்தகைய குறிக்கோளை அடைய முடியாது. ஆரம்ப மற்றும் தொடர் நடவடிக்கைகளுக்காகவும், தனித்தனி விடயங்களின் மீது ஆழ்ந்த கவனத்தை செலுத்துவதற்காகவும் மற்றும் பங்கேற்பாளர்களால் திறன்களைக் கட்டியெழுப்புவதற்காக மேலதிக சந்தர்ப்பங்களை வழங்குவதன் மூலம் சொல்லாடல் அமர்வுகள் சாத்தியமானதாகவும் பூரணப்படுத்தப்பட்டதாகவும் இருக்கவேண்டியதையும் அது தேவைப்படுத்துகின்றது. உள்;ர் ஆதரவுடனான அரங்குகள், பணிக்குழுக்கள் மற்றும் பயிற்சி அமர்வுகள் என்பவற்றின் மூலமாக சாத்தியமான வழிமுறையமைப்புகள் இயலுமானதாக்கப்பட முடியும். பங்கேற்பவர்களின் எண்ணிக்கை அல்லது, குறிப்பாக தடம் 1 எனும் மட்டத்திற்கு அண்மித்ததான இயக்கத்தின் தொடர்பில், ஒத்த அணுகுமுறைகளின் பின் தொடர்ந்து வரும் ஒத்த செயற்பாடுகள் சம்பந்தமாக, பங்கேற்பாளர்களின் வட்டத்தை விஸ்தரிப்பது வெற்றிக்கான மற்றுமொரு சாத்தியமான நடவடிக்கையாகும். நடைமுறையில் மோதுகைத் தீர்வுக்காகப் புதிய உந்து விசையை வழங்குகின்ற உறுதி வாய்ந்த மக்களின் மையக் கருவொன்றைப் பெறுவதற்கும், அதேவேளை இவ்வட்டத்தைத் தொடர்ந்து விஸ்தரிப்பதற்கும் (பரப்புவதற்கும்) இடையே ஒரு பொருத்தமான சமநிலையைப் பேணுவது இதன் குறிக்கோளாகும்.



* போரினால் மன அதிர்ச்சிக்குள்ளாகிய பிளவுபட்ட சமுதாயங்களிலும், சமூகங்களிலும் தாம் மேற்கொண்ட பணியும், நடைமுறைச் செயற்பாடுகளுக்காகத் தாம் வழங்கிய உந்துவிசையும் மூன்றாந் தரப்பினரால் முதலாம் கட்டத்தில் நிறுவப்பட்ட தற்காலிக அரங்குகளுக்குப் பதிலாக நிறுவப்பட்ட சபைகளில் எவ்வாறு *நிறுவன ரீதியாக நிலை நிறுத்தப்பட முடியும்* என்ற வினாவை சொல்லாடற் செய்திட்டங்கள் விரைவில் அல்லது பின்னொரு காலத்தில் எதிர்கொள்ளவுள்ளன. இவ்வகையான நிறுவன ரீதியான நிலைநிறுத்தம் இல்லாவிடில், ஆரம்பத்திலிருந்த சொல்லாடலின் சாதகமான விளைவுகள் காலப் போக்கில் மங்கி மறைந்து போகக் கூடிய உண்மையான ஆபத்து எப்போதும் உண்டு. சொல்லாடலை நிறுவனமயப்படுத்துதல் என்பது நிச்சயமாக அரைநிலை அரசாங்க-குழுக்களிடையேயான ஆணைக்குழுக்கள் தொடங்கி கூட்டுப் பணி படைகள் ஊடாக பல் இனக்குழும அ.சா.நிகள் வரை வேறுபடுகின்ற மிக வித்தியாசமான வடிவங்களைக் கொண்டதாக இருக்க முடியும்.

* ஆனால், சமாதானத் தொகுதிகள் அல்லது சமாதானக் கூட்டணிகள் என்பவற்றின் உருவாக்கத்திற்கு சொல்லாடற் நெய்திட்ட அணுகுமுறை வழங்கக்கூடிய மிக முக்கிய எண்ணக்கரு ரீதியான பங்களிப்பு யாதெனில், பொதுவாக, *சொல்லாடலை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிணக்குக் கலாசாரத்தை* மேம்படுத்துவதாகும். ஆரம்பத்தில் விபரிக்கப்பட்ட நலன்களின் அடிப்படையிலான ஆக்கபூர்வமான சொல்லாடலின் பண்புசார் மூலகங்களை ஒரு சில குழுக்களிடையேயான செய்திட்டங்களில் உள்ள சாதகமான விளைவுக்கு மட்டும் வெறுமனே பயன்படுத்தலாகாது. ஆனால் அரசியல் கலாசாரத்தில் ஒரு அடிப்படை நெறியுதாரணமாக மாற வேண்டும் என்பதே இதன் பொருள். மோதுகைத் தரப்பினரிடையே எந்த அளவுக்கு ஆக்கபூர்வமான ஒரு சொல்லாடல் இடம் பெறுகிறதோ, அந்த அளவுக்கே உண்மையான நிலைமாற்றம் சாத்தியமாகும் என்ற வகையில் பல இனக்குழும அரசியல் மோதுகைகளின் தரக்குறியீடாக அது மாறியுள்ளது. இது குறித்த ஒரு விடயம் தான் மத்திய கிழக்கு விவகாரம்.

## 6. உசாத்துணையும் மேலதிக வாசிப்பும்

Apel, Karl-Otto 1990. *Diskurs und Verantwortung,* Frankfurt: Suhrkamp.

Bar-On, Dan 2000. *Den Abgrund überbrücken: Mit persönlicher Geschichte politischen Feindschaften begegnen,* Hamburg: Edition Koerber.

Bercovitch, Jacob (ed.) 1996. *Resolving International Conflicts. The Theory and Practice of Mediation* Boulder: Lynne Rienner.

Bercovitch, Jacob & Allison Houston 1996. "The Study of International Mediation: Theoretical Issues and Empirical Evidence," *in* Bercovitch, op. cit., 11-35.

Bercovitch, Jacob & Jeffrey Z. Rubin (eds.) 1992. *Mediation in International Relations,* London: Macmillan.

Burton, John 1990. *Conflict: Resolution and Provention,* London: Macmillan.

Burton, John & Frank Dukes (eds.) 1990. Conflict: Readings in Management & Resolution, London: Macmillan

Charles Stewart Mott Foundation 1999 *Reaching for Peace: Lessons Learned from Mott Foundation´s Conflict Resolution Grantmaking,* 1989-1998, Evaluation conducted by CDR Associates and the Berghof Research Center for Constructive Conflict Management, Flint, Michigan: Charles Stewart Mott Foundation.

Fisher, Roger and William Ury 1981. *Getting to Yes,* Boston, Ms: Houghton Mifflin.

Fisher, Ronald J. 1997. *Interactive Conflict Resolution,* Syracuse, NY: Syracuse University Press.



Haumersen, Petra, Helmut Rademacher and Norbert Ropers 2002. *Konfliktbearbeitung in der Zivilgesellschaft. Die Workshop-Methode im rumänisch-ungarischen Konflikt,* Münster: LIT.

Hoffman, Mark 1995. "Defining and Evaluating Success: Facilitative Problem-Solving Workshops in an Interconnected Context," *Paradigms: The Kent Journal of International Relations,* 9, 2, 150-67.

Kelman, Herbert C. 1992. "Informal Mediation by the Scholar/Practitioner," in Bercovitch and Rubin, op. cit., 64-95.

Kelman, Herbert C. 1994. "Promoting Joint Thinking in International Conflicts: An Israeli-Palestinian Continuing Workshop," *Journal of Social Issues,* 50, 1, 157-78.

Kelman, Herbert C. 1995. "Contributions of an Unofficial Conflict Resolution Effort to the Israeli-Palestinian Breakthrough," *Negotiation Journal,* January 1995, 19-27.

Kleiboer, Marieke 1996. "Understanding the Success and Failure of International Mediation," *Journal of Conflict Resolution,* 40, 2, 360-89.

Lederach, John Paul 1997. *Building Peace: Sustainable Reconciliation in Divided Societies,*Washington, DC: United States Institute for Peace.

Lund, Michael and Guenola Rasamoelina (eds.) 2000. *The Impact of Conflict Prevention Policy: Cases, Measures, Assessments,* Baden-Baden: Nomos.

McCartney, Clem 1986. "Human Rights Education," in *11th Annual Report. Standing Advisory Committee on Human Rights,* London: HMSO.

Miall, Hugh, Oliver Ramsbotham and Tom Woodhouse 1999. *Contemporary Conflict Resolution* Cambridge: Polity.

Mitchell, Christopher 1993. "Problem-Solving Exercises and Theories of Conflict Resolution," in Sandole and van der Merwe, op. cit., 78-94.

Mitchell, Christopher & Michael Banks 1996. Handbook of Conflict Resolution: The Analytical Problem-Solving Approach, London: Pinter.

Otten, Hendrik & Werner Treuheit 1994. *Interkulturelles Lernen in Theorie und Praxis: Ein Handbuch für Jugendarbeit und Weiterbildung,* Opladen: Leske und Budrich.

Reychler, Luc & Thania Paffenholz (eds.) 2000. Peacebuilding: A Field Manual, Boulder, Co: Lynne Rienner.

Ross, Marc Howard & Jay Rothman (eds.) 1999. Theory and Practice in Ethnic Conflict Management: Theorizing Success and Failure, London: Macmillan.

Rothman, Jay 1998. "Dialogue in Conflict: Past and Future," in Eugene Weiner, op. cit., 216-235.

Sandole, Dennis J.D. & Hugo van der Merwe (eds.) 1993. *Conflict Resolution. Theory and Practice: Integration and Application,* Manchester: Manchester University Press.

Spencer, Tanya 1998. *A Synthesis of Evaluations of Peacebuilding Activities Undertaken by Humanitarian Agencies and Conflict Resolution Organisations,* London: Overseas Development Institute.

Weiner, Eugene (ed.) 1998. *The Handbook of Interethnic Coexistence,* New York, NY: Continuum.

Wimmer, Andreas, Richard Goldstone, Donald Horowitz, Ulrike Joas, and Conrad Schetter 2003. *Facing Ethnic Conflicts: Perspectives from Research and Policy-making* (forthcoming).

Wolleh, Oliver 2002. *Möglichkeiten und Grenzen interner Akteure bei der Friedensbildung in geteilten Gesellschaften. Die Conflict Resolution Trainer Group in Zypern (1993-1997),* Berlin: LIT.

Zartman, I. William 1985. Ripe for Resolution: Conflict and Intervention in Africa, New York, NY: Oxford University Press.